வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—சரவண குமார்

தேதி 04.01.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் விவசாயக் கடன்களின் எண்ணிக்கை 3.5 மடங்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உலக பிரெய்லி தினத்தை முன்னிட்டு பார்வை குறைபாடுடைய மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தேசிய அளவிலான பல்வேறு போட்டிகள் இன்று நடத்தப்பட்டன.

புதுச்சேரியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் 750 ரூபாய் வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரியில் கட்டாய ஹெல்மெட் சட்டம் அமலாக்கம் குறித்து பத்திரிக்கையாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

பிரதமர்-கிராமம்

நாட்டில் உள்ள கிராமங்களை வளர்ச்சி மற்றும் வாய்ப்புகளுக்கான துடிப்பு மிக்க மையங்களாக மாற்றி ஊரக இந்தியாவை அதிகாரமிக்கதாக மாற்றுவதில் மத்திய அரசு உறுதியாக உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2014-ஆம் ஆண்டு முதல் கிராமப்புற மக்கள் கண்ணியமாக வாழ்வதற்கான அனைத்து முன்னுரிமைகளையும் அரசு வழங்கி வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார். ஒவ்வொரு கிராமங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக ஒரு இயக்கம் துவக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். புதுடெல்லி பாரத் மண்டபத்தில் இன்று துவங்கி வரும் 9-ஆம் தேதி வரை நடைபெறும் கிராமீன் பாரத் பெருவிழாவை தொடக்கி வைத்துப் பேசுகையில் பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார். வளர்ச்சி அடைந்த பாரதம் -2047-க்கான உறுதியான ஊரக இந்தியா கட்டமைப்பு என்ற கருப்பொருளின் அடிப்படையிலும், கிராமம் வளர்ந்தால் தேசமும் வளரும் என்ற குறிக்கோளின் அடிப்படையிலும் இந்த கிராமீன் பாரத் பெருவிழா

கொண்டாடப்படுகிறது. கிராமப்புற சமுதாயத்தின் தன்னிறைவுக்காக, பி-எம் கிசான் திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு 3 லட்சம் கோடி ரூபாய் நிதி உதவி வழங்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்த பிரதமர், கடந்த 10 ஆண்டுகளில் விவசாயக் கடன்களின் எண்ணிக்கை 3.5 மடங்கு அதிகரிக்கப் பட்டுள்ளதாகவும், பல்வேறு பயிர்களுக்கான குறைந்த பட்ச ஆதரவு விலை உயர்த்தப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். தூய்மையான குடிநீர், லட்சகணக்கான கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் விநியோகிக்கப் படுவதாகவும், தூய்மை பாரத இயக்கம், பிரதமரின் வீடுகட்டும் திட்டம். ஜல்ஜீவன் இயக்கம் உள்ளிட்ட முயற்சிகள் கிராமப்புறங்களின் பயன் மற்றும் வளர்ச்சியை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். மின்னணு தொழில் நுட்பம் மூலம் நாட்டின் சிறந்த மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைகள் கிராமங்களோடு இணைக்கப்பட்டு இணைய வழியிலான மருத்துவ சேவைகள் வழங்கப்படுவதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

உலக பிரெய்லி தினம்

உலக பிரெய்லி தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. முற்றிலும் பார்க்கும் திறன் இழந்தோருக்கும், சிறிய பார்வை குறைபாடு உள்ளோருக்கும் தகவல்களை தெரிவிப்பதில் பிரெய்லி-யின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் பிரெய்லி தினம் கடைபிடிக்கப்படுகிறது. பார்வையற்றோர்கள், தங்களது கைகளால் தொட்டு உணர்ந்து, தகவல்களை தெரிந்து கொள்ளும் விதத்தில் லூயிஸ் பிரெய்லி என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதே பிரெய்லி முறை. அவரை கவுரவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 4-ஆம் தேதி உலக பிரெய்லி தினம் கடைபிடிக்கப்படும் என்று 2018-ஆம் ஆண்டு ஐ நா சபை அறிவித்தது. ஒவ்வொரு எழுத்து மற்றும் எண்ணை 6 புள்ளிகள் கொண்ட குறியீடுகள் மூலம் தொட்டு உணர்ந்து, பார்வை குறைபாடு உள்ளோர் பிரெய்லி முறையில் புத்தகங்கள் மற்றும் பத்திரிக்கைகளை படித்தும், எழுதியும் தகவல்களை பரிமாறிக் கொள்வர்.

உலக பிரெய்லி தினத்தை முன்னிட்டு பார்வையற்றோருக்கான தேசிய கூட்டமைப்பு இன்று புதுடெல்லியில் நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தது. பார்வை குறைபாடு உள்ள மாற்றுத் திறனாளி மாணவர்களுக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இன்று பிரெய்லி முறையில் வாசித்தல், எழுதுதல் மற்றும் விவாதங்கள் உள்ளிட்ட போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்தியாவில் பார்வை குறைபாடு உள்ளோருக்கு அதிகாரம் அளித்து, கல்வி, வேலை வாய்ப்பு, அவர்களுக்கான உரிமைகளை நிலை நாட்டுதல் மற்றும் ஒட்டுமொத்த நலனுக்காக அரசு பல்வேறு முன் முயற்சிகளை எடுத்து வருகிறது. பார்வை குறைபாடு உள்ளவர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான தேசிய நிறுவனம், பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான மாதிரி பள்ளிகள், பிரெய்லி மேம்பாட்டு பிரிவு , தேசிய அணுகத்தக்க நூலகத்தின் பிரெய்லி மொழியின் இணைப்பு உள்ளிட்டவை மூலம் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பெரும் பயன் அடைகின்றனர்.

*பிரதமர்-போர்வை*

**சூஃபி துறவி குவாஜா மைனுதின் சிஸ்தி**யின் நினைவு நாளை முன்னிட்டு ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் உள்ள **ஷரீப் தர்காவில்**, பிரதமர் திரு நரேந்திர மோடி சார்பில் போர்வை காணிக்கையாக வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும், சூஃபி பிரிவைச் சேர்ந்த இஸ்லாமிய துறவி **குவாஜா மைனுதின் சிஸ்தி**யின் நினைவு நாளைக் குறிக்கும் **ஊர்ஸ்** பண்டிகை ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் கொண்டாடப்படுவது வழக்கம். இவ்வாண்டு கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட மத்திய சிறுபான்மையினர் விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு பிரதமர் சார்பில் போர்வையை காணிக்கையாக வழங்கினார். கவாஜா சாஹிப், உலக நலனுக்காக விட்டுச் சென்ற கருத்துக்கள் அழிக்க முடியாதவை என்றும், அவரின் அன்பு மற்றும் நல்லிணக்க கோட்பாடுகளில் உலகெங்கிலும் உள்ள மக்கள் ஆழ்ந்த நம்பிக்கை வைத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி, **சூஃபி துறவி** குறித்து வெளியிட்ட செய்தியையும் திரு கிரண் ரிஜிஜு நிகழ்ச்சியின் போது வாசித்தார். பின்னர் தர்காவின் இணையதளம் மற்றும் Garib Nawaz என்ற யாத்ரீகர்களுக்கான செயலியையும் அமைச்சர் துவக்கி வைத்தார். மத்திய இணை அமைச்சர் பாகீரத் சௌத்ரி, சிறுபான்மையின அமைச்சகத்தின் செயலர் டாக்டர் சந்திரசேகர் குமார், பிஜேபி-யின் சிறுபான்மையினர் பிரிவின் தேசிய தலைவர் திரு ஜமால் சித்திக்கி உள்ளிட்டோரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*முதலமைச்சர்-பொங்கல்*

புதுச்சேரியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் அரசு சார்பில் கரும்பு, பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை, கல்கண்டு உள்ளிட்டவை பொங்கல் தொகுப்பாக பொது மக்களுக்கு வழங்கப்படுவது வழக்கம். இவ்வருடம் பொங்கல் பண்டிகைக்கு, பொங்கல் தொகுப்பிற்கு பதிலாக அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 750 ரூபாய் அவரவர் வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

ஹெல்மெட் விழிப்புணர்வு

புதுச்சேரியில் வரும் 12-ஆம் தேதி முதல் கட்டாய ஹெல்மெட் சட்டம் அமலாக உள்ள நிலையில் நேருவீதியில் உள்ள போக்குவரத்து காவல் துறை அலுவலகத்தில் இன்று காலை பத்திரிக்கையாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இதுகுறித்து கூடுதல் தகவல் தருகிறார் எமது செய்தியாளர்

ஏனாம்

புதுச்சேரி மாநிலம் ஏனாம் பிராந்தியத்தில், ஏனாம் மக்கள் தன்னார்வல அமைப்பு மூலம் தூய்மைப் பணி மேற்கொள்ளப்பட்டது. புதுடெல்லிக்கான, புதுச்சேரியின் சிறப்பு பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணாராவ் தலைமையில் சுமார் 500 தன்னார்வலர்கள், இன்று நடைபெற்ற இந்த ஒரு நாள் தூய்மைப் பணியில் ஈடுபட்டனர். முன்னதாக ஜிஎம்சி பாலயோகி மைதானத்தில் இந்நிகழ்ச்சியின் முக்கியத் துவம் குறித்து நடைபெற்ற கூட்டத்தில், திரு மல்லாடி கிருஷ்ணாராவ், மண்டல நிர்வாகி திரு ஆர் முனிசாமி, நகராட்சி ஆணையர் திரு கண்டுவில்லி ராமகிருஷ்ணா உள்ளிட்டோர் உரை நிகழ்த்தினர்.

டாக்டர் சிதம்பரம்

இந்தியாவின் அணு ஆராய்ச்சி திட்டங்களின் முக்கிய சிற்பியும், மூத்த விஞ்ஞானியுமான டாக்டர் ராஜகோபால் சிதம்பரம் இன்று காலை மும்பையில் காலமானார். 88 வயதான அவர் நீண்ட நாட்கள் நோய்வாய் பட்டு, சிகிச்சையில் இருந்தார். இந்தியாவின் அணு ஆயுத கட்டமைப்பு திட்டங்களில் டாக்டர் சிதம்பரம் முக்கிய பங்காற்றி உள்ளார். 1974-ஆம் ஆண்டு நிகழ்த்தப்பட்ட இந்தியாவின் முதல் அணு ஆயுத சோதனை மற்றும் அணுசக்தி நாடாக இந்தியாவை பிரகடனப் படுத்திய 1998-ஆம் ஆண்டின் பொக்ரான்-2 சோதனையிலும் இவர் தமது பங்களிப்பை வழங்கி உள்ளார். மத்திய அரசுக்கான முதன்மை அறிவியல் ஆலோசகர், பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் இயக்குநர், அணுசக்தி ஆணையத்தின் தலைவர் உள்ளிட்ட உயர் பதவிகளை இவர் வகித்துள்ளார். டாக்டர் ராஜகோபால் சிதம்பரத்திற்கு, 1975-ஆம் ஆண்டு பத்ம ஸ்ரீ விருதும் 1999-ஆம் ஆண்டு பத்ம விபூஷன் விருதும் வழங்கி கவுரவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

வானிலை

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, கடலோர தமிழகத்தின் ஓரிரு இடங்கள், புதுவை-காரைக்கால் பகுதிகளில் இன்றும், நாளையும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்று சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தப் பகுதிகளில் பொதுவாக காலை வேளையில் லேசான பனி மூட்டம் காணப்படும் என்றும், தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா

மற்றும் குமரிக் கடல் பகுதிகளில் மணிக்கு 35 முதல் 45 கிலோ மீட்டர் வேகத்திலும், இடையிடையே 55 கிலோமீட்டர் வேகத்திலும் பலத்த காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும் படியும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*விளையாட்டு-ஜோதி*

38-ஆவது தேசிய விளையாட்டுக்களுக்கான ஜோதி, தேஜஸ்வினி இன்று உத்தராகண்ட் மாநிலம் பாகேஸ்வர் வந்தடைந்தது. இம்மாதம் இறுதியில் உத்தராகண்ட் மாநிலத்தில் முதன் முறையாக இப்போட்டிகள் நடத்தப்பட உள்ளன. உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர்சிங் தாமி, சென்ற மாதம் 26-ஆம் தேதி இந்த தேஜஸ்வினி ஜோதி ஓட்டத்தை ஹல்துவானி நகரில் இருந்து கொடி அசைத்து துவக்கி வைத்தார். 13 மாநிலங்களின் வழியாக 99 இடங்களுக்கு பயணித்து இம்மாதம் 25-ஆம் தேதி இந்த ஜோதி டெஹராடூன் வந்தடையும்.

*கிரிக்கெட்*

சிட்னியில் நடைபெறும் பார்டர் கவாஸ்கர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இறுதி மற்றும் 5-ஆவது ஆட்டத்தின் 2-ஆம் நாளான இன்று ஆஸ்திரேலிய அணி தமது முதல் இன்னிங்சில் 181 ரன்னுக்கு ஆட்டம் இழந்தது. பின்னர் விளையாடிய இந்திய அணி இன்றைய ஆட்ட நேர முடிவில் 32 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 141 ரன் எடுத்திருந்தது. முன்னதாக தமது முதல் இன்னிங்சில் 185 ரன் எடுத்த இந்திய அணி, தற்போது ஆஸ்திரேலியாவை விட 145 ரன் முன்னிலைப் பெற்றுள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் விவசாயக் கடன்களின் எண்ணிக்கை 3.5 மடங்கு அதிகரித்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உலக பிரெய்லி தினத்தை முன்னிட்டு பார்வை குறைபாடுடைய மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு தேசிய அளவிலான பல்வேறு போட்டிகள் இன்று நடத்தப்பட்டன.

புதுச்சேரியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் 750 ரூபாய் வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்று முதலமைச்சர் திரு ரங்கசாமி அறிவித்துள்ளார்.

புதுச்சேரியில் கட்டாய ஹெல்மெட் சட்டம் அமலாக்கம் குறித்து பத்திரிக்கையாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி இன்று நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

-------------------------------